**செய்தி வெளியீடு எண்:368** **நாள்: 13.06.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, ஏழை எளிய மக்களுக்கு, உயர்தர மருத்துவ வசதிகள் எளிதில் கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் செயல்பட்டு வருகிறது. செல்வந்தர்களுக்கு இணையாக உயர்தர சிகிச்சை ஏழை எளிய மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 1.57 கோடி மருத்துவக் காப்பீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

பிறக்கும்போதே வாய் பேச முடியாத செவித்திறன் இழந்த குழந்தைகளுக்கு செவித்திறனை மீட்க 8 முதல் 10 இலட்சம் ரூபாய் வரை செலவாகும் என்ற நிலையில், இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் காது நுண் எலும்பு கருவி பொருத்தும் அறுவை சிகிச்சை (Cochlear Implant Surgery) எவ்வித கட்டணமுமின்றி செய்யப்பட்டு வருகிறது. இதுவரை 220 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் 2856 குழந்தைகளுக்கு காது நுண் எலும்பு கருவி பொருத்தும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு செவித்திறன் மீட்கப்பட்டுள்ளது.

சென்னை, அரசு பொது மருத்துவமனையில் காது நுண் எலும்பு கருவி பொருத்தும் அறுவை சிகிச்சை செய்து கொண்ட 200–வது குழந்தைக்கு செவித்திறன் கேட்கும் கருவியின் செயல்பாட்டினை இன்று (13.6.2017) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள். இப்பணியினை சிறப்பாக செயல்படுத்தி வரும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பணியாளர்களையும் பாராட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஊக்கப்படுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, சென்னை, அரசு பொது மருத்துவமனையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட அம்மா முழு உடல் பரிசோதனை மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். மேலும், உள்நோயாளிகள் பிரிவை ஆய்வு செய்து, நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்து, மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பணியாளர்கள் ஏழை எளிய மக்கள் பாராட்டிடும் வகையில் சேவை மனப்பான்மையுடன் பணிபுரிய வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் திரு சி. விஜயபாஸ்கர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திருமதி பா. வளர்மதி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர். விஜயகுமார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.என். பாலகங்கா, மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் எட்வின் ஜோ, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் டாக்டர் பானு, சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் நாராயணபாபு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**

**நாள் : 13.6.2017**